[1975 அக்டோபர் 28

கிளியநல்லூர்க்கு அருகில் பேருந்து விபத்து

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு தொழிலாளர் நலன்—போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த 18-1-1975-ஆம் நாள் அன்று திருச்சி-சேலம் வழியில், கிளியநல்லூர்க்கு அருகில், தமிழக அரசு போக்குவரத்துத் துறை பேருந்து ஒன்று ஆற்றில் விழுந்ததால் எத்தனை பயணிகள் காயமுற்றனர் ?

(இ) அதனால், பேருந்துக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்து 14-1-1975-ல் நிகழ்ந்ததாகும். 18-1-1975-ல் அல்ல. இவ் விபத்தில் யாரும் காயமடையவில்லை.

(இ) வண்டிக்குச் சேதம் சுமார் 975 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இந்த அரசு பஸ் ஆற்றிலே விழுந்ததால், அதனை மீட்க வேறொரு பஸ் கருவிகளுடன் வந்து அதை மீட்டிருக்கிறது. அப்படி மீட்கும்போது அந்த பஸ்ஸில் ஏதாவது உறுப்புகள் சேதம் அடைந்ததா ; எவ்வளவு என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கெனவே சொன்னேன். அந்த வண்டிக்குச் சேதம், 975 ரூபாய் அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. தற்போது அந்த வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

Motor Cars for the Members of the Legislature

*39 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state the number of Members of the Legislature who have purchased Motor Cars during the year 1975. from the quota assigned to them?

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் கார்கள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்கீட்டிலிருந்து, 1975 ஆம் ஆண்டு எத்தனை உறுப்பினர்கள் மோட்டார் கார்கள் வாங்கியுள்ளனர் ?

1975 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆறு உறுப்பினர்கள் மட்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத் தலைவர் அவர்களே, இந்த கண்ட்ரோல் முறையில் ரிஜிஸ்ட்டர் செய்து கார் வாங்கியவர்களில் எவ்வளவு பேர் காரை விற்றிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இரண்டு பேர்களுடைய கார் பழுது ்ட்டு, அவற்றை விற்பதற்கு அனுமதி வாங்கியிருக்கிறார்கள்.

Power Connection for Street Lights in Harijan Colony

* 40 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware that even though the street lights have been provided in the Harijan Colony at Kottathur in Musiri Panchayat Union, Tiruchirappalli District, power connection has not yet been given; and

(*b*) if so, the reason therefor?

அரிசனக் குடியிருப்புத் தெரு மின் விளக்குகளுக்கு மின் வசதி வழங்குதல்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளிமாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டத்தூர் கிராமத்திலுள்ள அரிசனக் குடியிருப்பில், தெரு மின் விளக்குகள் போடப்பட்டும், மின்சாரம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

(இ) கோட்டத்தூர் கிராமத்தின் அரிசனக் குடியிருப்பு உட்பட அந்தக் கிராமத்திற்கு மின் வசதியளிப்பதற்கான செயற்குறிப்பு ஏற்பளிக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளது என மின் வாரியம் கூறியுள்ளது. மின் கடத்திகள் (conductors) போதுமான அளவில் கிடைக்கப் பெறாமையின் காரணமாக மேற்படி வேலைத் திட்டம் முற்றுப்பெறவில்லை. மேற்படி மின் கடத்திகள் கிடைக்கப்பெற்றவுடன் மேற்படி வேலைத் திட்டம் விரைவில் மேற்கொள்ளப் படும்.